# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1643/35 - 2010 මාර්තු 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.03.04

*1643/35 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி III - காணிகள்

### காணி அபிவிருத்தி கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

**காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம்**

*1981 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, 1993 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, 1995 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க மற்றும் 1996 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கத் திருத்தச் சட்டங்களினால் திருத்தப்பட்டவாறான 1969 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 464) 155, 156 ஆம் பிரிவுகளின் கீழ் காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு, போர் வீரர் நலனோம்புகை அமைச்சரினால் ஆக்கப்பட்டு, அச்சட்டத்தின் 157 ஆம் பிரிவின் கீழ் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

ஜோன்ஸ்ரன் சேவியர் பெர்ணாந்து,
காணி, காணி அபிவிருத்தி, குடியிருப்பு,
போர்வீரர் நலனோம்புகை அமைச்சர்.

இல. 80/5, "கொவிஜன மந்திரய",
இரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2010, பெப்புருவரி 10.

1. இவ்வொழுங்கு விதிகள் காணி அபிவிருத்தி ஒழுங்குவிதிகள் - 2010 என அழைக்கப்படலாம்.

2. 1981, நவெம்பர் மாதம் 26 ஆந் திகதி ஆக்கப்பட்ட LD/B/167/34 (II) எனும் இலக்கமுடைய காணி அபிவிருத்தி ஒழுங்குவிதிகள் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

3. 1981 ஆம் ஆண்டின் காணி அபிவிருத்தி ஒழுங்குவிதிகள் 14 : 2 (ii) அ, ஆ, இ, ஈ பந்திகளுக்குப் பதிலாக பின்வரும் பந்திகளை பதிலீடு செய்வதன் மூலம் அதாவது-

| | | காணித் துண்டொன்றின் விஸ்தீரணம் 10 ஏக்கர் அல்லது அதைவிடக் குறைவாக இருக்கும் போது ரூபா சதம் | காணித்துண்டொன்றின் விஸ்தீரணம் 10 ஏக்கர் அல்லது அதைவிடக் கூடுதலாக இருக்கும் போது ரூபா சதம் |
|---|---|---|---|
| (அ) | குறித்த கால எல்லையின் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட பெயர் குறித்தலொன்றிற்காக | 25.00 | 125.00 |
| (ஆ) | பெயர் குறித்தலொன்றை இரத்துச் செய்வதற்கு | 25.00 | 125.00 |
| (இ) | இரண்டாவதாக அல்லது அதற்குப் பின்னர் செய்யப்படுகின்ற பெயர் குறித்தலொன்றிற்காக | 100.00 | 500.00 |
| (ஈ) | இரத்துச் செய்வதற்காக அல்லது ஆவணத்தின் மூலமே சமர்ப்பிக்கப்படுகின்ற இரண்டாவது அல்லது அதற்குப் பின்னர் செய்யப்படுகின்ற பெயர் குறித்தலொன்றிக்காக | 100.00 | 500.00 |

*3- 671*